ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2263 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13

*2263ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| *சட்டங்கள்* | - | *பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள்* | - |
| *சட்டமூலங்கள்* | - | *பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்* | - |
| *மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள்* | - | *மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - | *சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள்* | - | *நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்* | *8* |
| *மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - | *நானாவித அறிவித்தல்கள்* | *9* |
| *கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள்* | - | *பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள்* | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 21ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7 - B 082305 - 353 (2022/01)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

344 ஏ, பார் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் வசிக்கும் நாகரெத்தினம் கிரிஷ்ணபிரியன் ஆகிய நான், நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107), பிரிவு 7 இன்படி, மட்டக்களப்பு மாவட்ட, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற வலயத்தில் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்த லின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

நாகரெத்தினம் கிரிஷ்ணபிரியன்.

344 ஏ,
பார் வீதி,
மட்டக்களப்பு ,
2022.01.03.

01- 65

---

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

09, ஒட்டுப்பள்ளி குறுக்கு வீதி, ஏறாவூர்-06 என்ற முகவரியில் வசிக்கும் அப்துல் மஜீத் முஹம்மது நபீஸ் ஆகிய நான், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107), பிரிவு 7 இன்படி, மட்டக்களப்பு மாவட்ட, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற வலயத்தில் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

அப்துல் மஜீத் முஹம்மது
நபீஸ்.

09, ஒட்டுப்பள்ளி குறுக்கு வீதி,
ஏறாவூர்-06,
2022.01.03.

01- 66

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

பிரதான வீதி, புதுக்குடியிருப்பு (30158), மட்டக்களப்பு என்ற முகவரியில் வசிக்கும் சுந்தரராஜன் டிநோஷன் ஆகிய நான், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107), பிரிவு 7 இன்படி, மட்டக்களப்பு மாவட்ட, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற வலயத்தில் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சுந்தரராஜன் டிநோஷன்.

பிரதான வீதி,
புதுக்குடியிருப்பு (30158),
மட்டக்களப்பு,
2022.01.04.

01- 80

---

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

இல.199A, மாவடி வீதி, சாய்ந்தமருது -06 என்னும் முகவரியில் வசிக்கும் திரு. முகைதீன் பாவா முகம்மட் பௌஷான் ஆகிய நான், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107), 7 ஆம் பிரிவின், “ஆ” பகுதிக்கமைவாக அம்பாறை மாவட்ட, கல்முனை மேல் நீதிமன்ற வலயத்தில் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முகைதீன் பாவா முகம்மட்
பௌஷான்.

இல.199A,
மாவடி வீதி,
சாய்ந்தமருது -06 ,
2021.12.29.

01- 129

# நானாவித அறிவித்தல்கள்

**பயோமாஸ் சப்ளைஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி பதிவு இல. PV 76480**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(e) மற்றும் (f) பிரிவின் கீழ் கலைத்தலுக்கான அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* பயோமாஸ் சப்ளைஸ் (பிரைவட்) லிமிட்டட்

*பதிவு அலுவலகத்தின் முகவரி:* 165/6, பார்க் வீதி, கொழும்பு 05
*நீதிமன்றம்:* மேல் மாகாணத்தின் வர்த்தக உயர் நீதிமன்றம் (கொழும்பு சிவில்)
*விடயத்தின் இலக்கம்:* HC/ Civil/96/2021/Co
*மனு வழங்கல் திகதி:* 2021, திசெம்பர் 15
*மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி:* பயோமாஸ் சப்ளைஸ் ( பிரைவட்) லிமிட்டட், 165/6, பார்க் வீதி, கொழும்பு 5
*மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் மற்றும் முகவரி:* காஞ்சனா சேனாநாயக்க AAL.
35 ஆம் மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 1.

**விதிகள்.-** 1939 க்கு கலைக்கப்படும் நிறுவனங்களின் விதி 07 இன் விதிகளின் படி மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும் எதிர்பார்ப்பாளர் அல்லது ஆதரவாளர்களுக்கு தனது நோக்கத்தை மனுதாரருக்கோ அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவரது பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞருக்கோ அனுப்ப வேண்டும். விதி 13 இன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நேரம் மற்றும் முறையில் மூலம்.

01-128

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.